**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.89** **நாள் : 01.05.2024**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், உழைப்பாளர் தினத்தினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்களை பாராட்டி நல உதவிகளை வழங்கினார்.**

இன்று (01.05.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், உழைப்பாளர் தினத்தினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்களைப் பாராட்டி முதற்கட்டமாக 400 தூய்மை மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு ரூ.7.41 இலட்சம் மதிப்பில் 2 இணை சீருடைகள், தொப்பி, கைத்துண்டு, குளியல் துண்டு, டிபன் பாக்ஸ் மற்றும் தண்ணீர் பாட்டில், ஒரு பை உள்ளிட்ட நல உதவிகள் வழங்கிடும் அடையாளமாக, 12 தூய்மை மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு நல உதவிகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்களுடன் விருந்து உபசரிப்பு நிகழ்வில் பங்கேற்று அவர்களுடன் அமர்ந்து உணவு உட்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியி மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் 3,959 நிரந்தர தூய்மைப் பணியாளர்கள், 420 NMR பணியாளர்கள், 4,990 சுய உதவிக்குழு பணியாளர்கள் என 9369 தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் NULM மற்றும் சுயஉதவிக் குழுவைச் சார்ந்த 2446 மலேரியா பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களில் முதற்கட்டமாக 200 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 200 மலேரியா பணியாளர்கள் என 400 பணியாளர்களுக்கு நல உதவிகள் இன்று மாண்புமிகு மேயர் அவர்களால் வழங்கப்பட்டது. மீதமுள்ள பணியாளர்களுக்கும் இந்த நல உதவிகள் வழங்கப்படவுள்ளது.

**இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த மாதம் தாட்கோ மூலம் தூய்மைப் பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. இதன் மூலம் மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் இந்த உறுப்பினர் அட்டையின் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறலாம்.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை மூலமாக பணியில் இருக்கும் போது உயிரிழக்கும் தூய்மைப் பணியாளருக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். மேலும், விபத்து ஏற்படும் சூழலில் கண் மற்றும் கால் இழப்பு ஏற்படும் நிலையில் அவர்களுக்கு ஒரு இலட்சம் நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது. தூய்மைப் பணியாளர்கள் குழந்தைகள் கல்வி பயில்வதற்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த உறுப்பினர் அட்டை வைத்திருக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு திறன் வளர்ச்சி பயிற்சியும் வழங்கப்படுகிறது.

கடந்த மாதம் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் இந்நலவாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மட்டுமில்லாமல் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கும் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் கிடைத்திடவும் மற்றும் இதர தொடர்புடைய சேவைகள் பெறுவதற்கும் ஏதுவாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு உதவி மையம் (One Stop Centre For Cleanliness Workers) என 15 மண்டலங்களில் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தூய்மைப் பணியாளர்கள் இந்த மையங்களை அணுகி தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக சேர்வதற்கும் உரிய நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கும், இதர சேவைகளைப் பெற்றும் பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தூய்மைப் பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு தூய்மைப் பணியாளரும் பகல், இரவு பாராமல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு நேரங்களில் சாலைகளில் பணிபுரியும் போது சில விபத்துகள் ஏற்படுகிறது. அதனைத் தவிர்க்கும் விதமாக, வாகனங்களில் வரும் நபர்களுக்கு தெரியும் வகையில் தூய்மை பணியாளர்களின் சீருடைகளில் ஒளிரும் வகையிலான ரேடியம் பொருத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இன்று 400 தூய்மை மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு சீருடை உள்ளிட்ட நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மே மாதம் முழுவதும் மாநகராட்சிக்குட்பட்ட 11 ஆயிரத்திற்கு மேற்பட்ட தூய்மை மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு இந்த நல உதவிகள் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தலைமைப் பொறியாளர் (பொது) திருமதி எஸ். ராஜேஸ்வரி, தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.கே.விஜயகுமார் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**